முருகப்பெருமான் துணை

**மகான் பூதத்தாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.09.2023**, புதன்கிழமை

1. அறமாக வாழும் ஞானியே
ஆனந்த ஞானம் தந்தருளி
வரமாக வேண்டுவோர் வாழ்வில்
வளம்தரும் ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது யாளிதிங்கள்
அய்நான்கு திகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 20 ம் நாள், 06.09.2023, புதன்கிழமை)
3. வாரம்தனில் பூதத்தாழ்வார் யானும்
வழங்குவேன் உலகநலம்பெற
வாராந்திரம் ஞானிகள் பூசை
வல்லமைபட அரங்கனை நோக்கி
4. நோக்கியே உலகோர் அனுகி
நிலமதனில் தீட்சை ஏற்று பின்
ஆக்கமுடன் பூசை தொடர
அரங்கன் ஞானபலம் உடன்வந்து
5. வந்துமே பாதுகாப்புத் தரும்
வள்ளல் தன்மை பெருக்கும்
விந்தைமிகு தரும சேவையை
வினவிட ஏற்று மக்கள் தானும்
6. தானதரும நெறி வளரும்படி
தரணியெங்கும் செய்து வர
ஞானபலம் உண்மைபலம் தருமபலம்
நம்பிக்கை தரும் குருவருள் பலம்

7. பலம் கூடி வரும் மக்களுக்கு
பாவகருமவினை விலகுவதுடன்
சலனமோ பொருளாசையோ இன்றி
சர்வமும் குருவருள் எனும் நியதி
8. நியதி மன அமைதி கிட்டி
நிம்மதி தேடி வெளியில் அலையா
தயவே தருமமே உகந்த வழி
தலைவன் முருகனே சிறந்த கடவுள்
9. கடவுளெனும் ஞானத்தெளிவும்
கடைகாலமும் வணங்கித்தொடர
தடையற அருள்வாய் என்கின்ற
தக்க சரணாகதியும் கூடி
10. கூடியே குருவழி திருவருளை
கண்டிடுவோம் எனும் மன உறுதி
நாடியே உலகினில் தனித்துவ
ஞானவான்களாக நிலை பெருகி
11. பெருகியே பேரானந்த கதி வாசல்
பிரணவக்குடிலில் நிரம்பி இருக்க
வருவோர்க்கு அரங்கன் வழி
வாசல்திறவு பெரும்பேறுகிட்டும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—